TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051836

1. District : Madurai PS: V&AC Year: 2021 FIR No.: 06/2021 Date: 28.04.21
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.04.2021 Date to : காலை சுமார் 11:30 மணிக்கு
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 26.04.2021 Time to : காலை சுமார் 11:00 மணிக்கு
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28.04.21 Time : 09:00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 28.04.21 Time : 09:30 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 Km. [illegible]
Beat Number : (b) Address : மண்டலம் -3, மதுரை மாநகராட்சி, முனிச்சாலை, மதுரை
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. இளங்கோ (b) Father's/ Husband's Name : திரு ரவி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 25/2021 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : 5, பாரதியார் தெரு, அவனியாபுரம், மதுரை - 12
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. முத்துக்கனி, கிளார்க், மண்டலம் 3 மதுரை மாநகராட்சி முனிச்சாலை, மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. [signature] 28.04.2021 P.M.R [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.04.2021, 10:00hrs.

Name: பெயர் P. M. RAMESH PRABU
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் .........

உ.ம.கு.க. பிரிவு,
மதுரை
28.04.2021.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 28.04.2021-ஆம் தேதி காலை 09.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை, அவனியாபுரம், பாரதியார் தெரு, கதவு எண். 5 என்ற முகவரியில் வசிக்கும் ர.இளங்கோ த/பெ. ரவி என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர், ர.இளங்கோ, த/பெ .ரவி, 5, பாரதியார் தெரு, அவனியாபுரம், மதுரை.12. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் அவனியாபுரம், பாரதியார் தெருவில் உள்ள எனது சித்தி வீட்டில் தற்போது வசித்து வருகிறேன். என்னுடைய அப்பா எனது சிறு வயதிலேயே காலமாகிவிட்டார். என்னுடைய அம்மா திருமதி.ராமுஅம்மாள் எங்களது சொந்த ஊரான இராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே சீமானேந்தல் என்ற கிராமத்தில் வசித்து வருகிறார். என் உடன் பிறந்த தம்பி அஜித்குமார் தமிழ்நாடு காவல் துறையில் காவலராக சென்னையில் பணிபுரிந்து வருகிறார். நான் பி.எஸ்.சி ஹோட்டல் மேனேஜ்மென்ட் படித்து விட்டு தற்போது T.N.P.S.C. தேர்வுக்கு படித்து வருகிறேன். கடந்த 06.01.2021ம் தேதியன்று திரு.சந்திரன் என்பவருக்கு சொந்தமான அவனியாபுரம் கிராம சர்வே எண். 343/1ல் சுமார் 1009 சதுரடி பரப்பளவு கொண்ட மனையிடமும் அந்த மனையிடத்தின் ஒரு பகுதியில் கட்டப்பட்டுள்ள மூன்று வீடுகள் முறையே கதவு எண்.12/13,12/4 மற்றும் 124 சேர்ந்த சொத்தை எனது பெயரிலும் மற்றும் எனது அம்மா திருமதி. ராமு பெயரிலும் சந்திரன் மனைவி திருமதி.காந்தியம்மாள், மகள் செல்வி, சுமதி, மகன் தர்மபிரபு ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றோம். பின்னர் 12.04.2021-ம் தேதியன்று அவனியாபுரம் மதுரை மாநகராட்சி வரி வசூல் மையத்திற்கு சென்று நாங்கள் வாங்கிய சொத்தை சந்திரன் பெயரிலிருந்து எங்களது பெயருக்கு மாற்றம் செய்ய நடைமுறைகள் பற்றி கேட்டேன். அதற்கு அங்கிருந்தவர் சொத்து வரிக்கான நிலுவை தொகையினை செலுத்திய பின்னர் அதற்கான மனுவை மண்டலம்-3ல் கொடுத்த பின்னர் தான் பெயர் மாற்றம் செய்ய முடியும் என்று கூறி மூன்று வீட்டிற்கும் ரூ.264/- சொத்து வரி கட்ட வேண்டும் என தெரிவித்தார். அதன்படி நான் 16.04.2021ம் தேதியன்று மேற்படி அலுவலகத்தில் மூன்று வீட்டிற்கும் ரசீது எண்கள்.115/308/1/21-22/0000501,115/308/1/21-22/0000502 மற்றும் 115/308/1/21-22/0000503 ன்படி வரி செலுத்தினேன். அன்றைய தினம் முனிச்சாலையில் உள்ள மண்டலம்-3 அலுவலகத்திற்கு சென்று சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய மூன்று வீட்டிற்கும் தலா ரூபாய்.100/- செலுத்தியும் கோடி நாள் தொகையாக ரூ.300/- செலுத்தியும் மனு பெற்றேன். பின்னர் மேற்படி மனுக்களை பூர்த்தி செய்து 19.04.2021ம் தேதியன்று பகல் சுமார் 11.45 மணிக்கு முனிச்சாலையில் உள்ள மண்டலம்-3 அலுவலகத்தில் கொடுத்தேன். என் மனுவை பெற்றுக்கொண்டு மூன்று நாட்கள் கழித்து மேற்படி அலுவலகத்தில் கிளார்க்காக பணிபுரியும் திரு.முத்துக்கனி அவர்களை வந்து பார்க்கும்படி அறிவுறுத்தினர்.

அதன்படி நான் 23.04.2021ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு திரு.முத்துக்கனி அவர்களை சந்தித்து எனது மற்றும் எனது தாயாரின் பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய கேட்டேன். அவர் அதற்கு ஒரு மனுவிற்கு ரூபாய்.3,000/-வீதம் மூன்று மனுக்களுக்கு ரூ.9,000/-ம் கொடுங்கள் என கேட்டார். அதற்கு நான் அரசுக்கு செலுத்த வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு திரு.முத்துக்கனி அவர்கள் உங்கள் மனு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் நான் கேட்ட பணம் எனக்கு கொடுத்தால் தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறினார். சரி ஏற்பாடு செய்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு சென்று விட்டேன். பின்னர் 26.04.2021ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு திரு.முத்துக்கனி அவர்களை மதுரை முனிச்சாலையில் உள்ள அவரது மண்டலம்-3 அலுவலகத்தில் சந்தித்து எங்களது பெயரில் உள்ள சொத்தின் மீது பெயர் மாற்றம் செய்வது குறித்து கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.9,000/-ம் கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் பணம் ஏதும் கொண்டு வரவில்லை என்று கூறினேன். அதற்கு திரு.முத்துக்கனி அவர்கள் நான் கேட்ட ரூபாய் 9,000/- கொடுத்தால்தான் சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்ய முடியும் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நீங்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளதே சார் எனக்கு வேலை எதுவும் இல்லை கொஞ்சம் குறையுங்கள் என்று கேட்டதற்கு, அவர் உங்களுக்காக வேண்டுமானால் ரூபாய்.1,000/- குறைத்துக் கொள்கிறேன் என்று கூறி 28.04.2021-ம் தேதி புதன்கிழமை காலை ரூபாய் 8,000/- கொண்டு வந்து அவரது அலுவலகத்தில் அவரை பார்த்து கொடுத்தால், உடனே சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்கிறேன் இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என கண்டிப்பாகக் கூறிவிட்டார். பின்னர் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தேன், கொரனா காலத்தில் பணம் புரட்ட மிகசிரமமாக இருந்தது. சொத்துவரிக்கான அரசு கட்டணம் நிலுவை தொகை ரூ.264/- கட்டிய பின்னரும் ரூபாய் 8,000/- லஞ்சம் கொடுங்கள் எனக் கேட்டது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. எனவே திரு.முத்துக்கனிக்கு ரூ.8000/- கொடுக்க விருப்பமில்லை. எனவே, எனது பெயர் மற்றும் எனது தாயாரின் பெயரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய லஞ்சமாக ரூபாய்.8,000/- கேட்கும் திரு.முத்துக்கனி, கிளார்க், மண்டலம்-3, மதுரை மாநகராட்சி என்பவர் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு இப்புகார் மனுவினை கொடுக்கிறேன். இத்துடன் நான் 06.01.2021 ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவண எண். 182/2021 ன் நகல் நடப்பு ஆண்டு வரை சொத்து வரி நிலுவை தொகை செலுத்தியதற்கான மூன்று ரசீது எண்கள். 115/308/1/21-22/0000501,115/308/1/21-22/0000502 மற்றும் 115/308/1/21-22/0000503 ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும் திரு.முத்துக்கனி அவர்கள் கேட்ட லஞ்ச பணம் ரூ.8000/-த்தையும் வைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, (s-d) R.Elango 28.04.2021.

Sir, received the written complaint on 28.04.2021 at 09.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 06/2021 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.30 hrs., and took up investigation (s-d) P.M.Ramesh Prabhu 28.04.2021, Inspector / V&AC, Madurai.

Original FIR along with the original written complaint of Tr.R.Elango s/o Ravi, 5, Bharathiar street, Avaniyapuram, Madurai 12, photo copy of Sale deed in Doc No.182/2021 and Original payment of property tax receipts in 115/308/1/21-22/0000501, 115/308/1/21-22/0000502 and 115/308/1/21-22/0000503, dated 16.04.2021 are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(P.M.Ramesh Prabhu)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.
28.04.2021